Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.309/2024

Dated 18-02-2026
Deposition of witness for : PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வினோத்சரவணன் | வயது | : | 46 |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | சூரக்கோட்டை | தொழில் | : | தலைமை காவலர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது நடுகாவேரி காவல்நிலையத்தில் தலைமை காவலராக இருக்கிறேன். கடந்த 21.5.2024 ல் திருக்காட்டு பள்ளி காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் படி மேற்படி மருத்துவமனைக்கு சென்று ஐ.சி.யு வார்டில் சிகிச்சையில் இருந்த

விஷ்ணம்பேட்டை வடக்கு தெருவை சேர்ந்த ராஜா என்ற விக்டர் பெர்ணான்டஸ் பேச முடியாத மயக்கநிலையில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த அவருடைய மனைவி ஆரோக்கியமேரி என்பவரிடம் நடந்த விபரத்தை கேட்டேன். அவர் வாக்குமூலமாக சொன்னதை நான் பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ. 5** ஆகும்.

2) பின்பு நிலையம் வந்து 22.5.2024ம் தேதி அதிகாலை 1.45 மணிக்கு நிலைய கு.எண்.232/2024 பிரிவு 294(பி) 324 307 இ.த.ச. ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை நீதித்துறை நடுவர் திருவையாறு அவர்களுக்கு அனுப்பி வைத்தும் நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

3) இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்க விசாரணை

1) 22.5.2024 அன்று நான் மருத்துவகல்லூரி மருத்துவமணைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதுபோல் புகார் வாக்குமூலம் என்னால் காவல்நிலையத்தில் வைத்து என்னால் எழுதப்பட்டது என்றும் ஆரோக்கியமேரியிடம் எந்த புகாரும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

2) புகாரில்உள்ள கையெழுத்து ஆரோக்கியமேரியிடம் காவல்நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

3) புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் 24.5.2024 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 23.5.2024 அன்று நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் அவர் கையொப்பம் இட்டுள்ளார்.

4) எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரி மீது ஒரு பொய்யான புகார் பதிவு செய்யப்பட்டு அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்